கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.300/2024

வா.சா.– 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **திரு. சகாதேவன்** | தொழில் | |
| த/பெயர் | **ராமதாஸ்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 11.08.2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் 3ம் தரப்பினர் ஆவேன். இந்த வழக்கின் பிரதிவாதியான மரியநல்லதம்பிக்கு வாதி விஜயகுமாரிடம் நான்தான் ரூ.10 லட்சம் வாங்கி கொடுத்தேன். ராஜாராம் என்பவர் புரோநோட்டை எழுதினார். அதில் நானும் ராஜாராமும் கையெழுத்து போட்டோம்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

எனக்கு எழுத படிக்க தெரியும். வாதி எனது சொந்தக்காரர் தான். அவர் என்ன வேலை செய்கிறார் என்றால் வீட்டில் தான் உள்ளார். பிரதிவாதியை எனக்கு நன்றாக தெரியும். அவரை எனக்கு பூக்கடையில் பூ கொண்டு வருவதால் தெரியும். நான் பணம் வட்டிக்கு கொடுக்கும் தொழில் செய்கிறேன் என்றால் இல்லை. நீதிமன்றத்தில் பணம் கொடுக்கல் சம்மந்தமாக இதற்கு முன்னால் வழக்கு நடத்தியுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் நன்றாக தெரியும். பிரதிவாதி நல்லதம்பி வாதியிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. பிரதிவாதி யார், யாரிடம் கடன் பெற்றார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. புரோநோட்டை எங்கு வைத்து எழுதினோம் என்றால் விஜயகுமார் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. ராஜாராம் எனக்கு உறவினர் தான். அவர் வேலை எதுவும் செய்யவில்லை, உதவி வேளாண்மை அலுவலராக இருந்தார். எவ்வளவு பணம் வாங்கி கொடுத்தேன் என்றால் ரூ.10 லட்சம் ஆகும். பொதுவாக வீட்டில் யாரும் 10 லட்சம் வைத்துக் கொள்வதில்லை என்றாலும் வங்கியிலிருந்து எடுத்து வருவார்கள் என்றாலும் தெரியவில்லை. நானும் வாதியும் ஒரே உறவினர்கள் என்றாலும் லேவாதேவி தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. பொதுவாக கடன்

கொடுக்கும் போது எழுதாத வெற்று புரோநோட்டில் எழுதுவார்கள் என்றால் அது பற்றி தெரியாது. பணம் கொடுக்கல், வாங்கலில் தாவா ஏற்பட்டால்தான் அதை பூர்த்தி செய்து வழக்கு தொடுப்பார்கள் என்றால் தெரியாது. பிரதிவாதி எந்த கையெழுத்தும் என் முன் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதியிடமிருந்து பிரதிவாதி எந்த பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.08.11 20:12:25 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.